முருகப்பெருமான் துணை

**மகான் தண்டியடிகள் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.07.2022, வெள்ளிக்கிழமை

1. தரணி காக்கும் ஞானியே
தரும பலமோடு தவபலத்தை
சரவணச் சுடரேற்றி அருளும்
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
வரங்களென முன்னான்கோர் திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 13 நாள், 29.07.2022 வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே தண்டியடிகள் யானும்
தரணியோர் நலம்பெற உரைப்பேன்
அண்ணல் அரங்கன் தரும்
அருளமுதை உலகோர் உண்ண
4. உண்ணவே சகல பிணி அகன்று
உயிர் பாதுகாப்புப் பெறுவர்
எண்ணம் தூய்மை கண்டு
எளிமைபட வாழ்வு காண்பர்
5. காண்கவே வாழுகின்ற காலமே
கட்டாயம் ஞானவாழ்வெனும்
உண்மையும் மேன்மையும் கண்டு
ஊழதை வென்று தேறுவர்
6. தேறவழி காட்டும் அரங்கனின்
தெய்வ நெறியை ஏற்றுவிட
அறத்தின் பெருமை தன்மை
அவசியம் என அறியும் ஞானம் கூடி
7. கூடியே அரங்க மகானின்
குறைவிலா அன்னதான சேவையை
தேடியே உலகம் எல்லாம் செய்து
தெரிவிப்பேன் தருமவான்கள் ஆவர்
8. ஆவரே அரங்கன் தேடும்
அகிலம் மாற்றும் ஞானவான்களாக
புவனம் எங்கிலும் பெருகி
புகலுவேன் ஞான ஆட்சி காலம்
9. காலம் துவங்கும் சேவை
கந்த வேலன் ஆணையாக
காலம் வெல்லும் சக்தியாக
கலியினில் சிறப்புக் காண்பர்

10. காண்கவே இந்தவித மாற்றம்
கந்தவேலன் கருணையாக
ஆன்மீக ஞான அரசியலாக
அரங்கன் படைகள் நிறைந்த களமாக
11. ஆகவே சடுதி உலகம் கண்டு
அறிவிப்பேன் ஞானிகள் ஆட்சி
வகைபட இனிதே நடந்தேறும்
வழங்கிய அருளாசி முற்றே

—சுபம்—